# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 444/2024

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-1/PW-1 |
| Name | : லோகேஷ்ராஜ் |
| Father/Husband's Name | : முருகானந்தம் |
| Village | : மறைமலைநகர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 24 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25.06.2025.

**முதல் விசாரணை–**

நான் என்னுடைய மாமாவின் கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் வீட்டின் அருகில் இருக்கிறார். கடந்த 08.08.2023 ஆம் தேதி காலை 10, 10.30 மணியளவில் ஆஜர் எதிரி அப்போது அவர் வளர்க்கும் ஒரு நாயை என்னுடைய அப்பாவின் கடையிலுள்ள கலைவாணர் தெரு, மறைமலைநகர் என்ற இடத்தில் கொண்டு வந்தார். மேற்படி நாயானது என்னுடைய அப்பாவின் கடை முன் நாய் சிறுநீர் , மலம் கழிப்பதை ஒரு வாரம் வழக்கமாக கொண்டிருந்தது. மேற்சொன்ன தேதியான 08.08.2023 அன்று காலை 10 மணியளவில் இது சம்பந்தமாக நான் ஆஜர் எதிரியிடம் கேட்டபோது, நான் அப்படிதான் செய்வேன் என்று கூறி, கையில் வைத்திருந்த கட்டையை எடுத்து என் தலையில் அடித்தார். பின்னர், ரோட்டில் தள்ளிவிட்டு என் நெஞ்சில் ஏறி தேவிடியாபையா, இரு உன்னை வைத்துகொள்கிறேன் என்று அசிங்கமாக திட்டி குத்தினார். பின்னர் அவர் வீட்டிற்கு சென்றுவிட்டு

நாயை கட்டிவிட்டு ஒரு கட்டையை எடுத்துவந்து என் தங்கையையும், என்னையையும் மற்றும் கடையில் இருந்த பொருட்களையும் கட்டையால் அடித்து நொறுக்கினார். பின்னர் என்னை முகத்திலும், உடலிலும் ஏறி ஏறி குத்தி கட்டையால் அடித்தார்.அப்போது எனது கழுத்தில் இருந்த 2 சவரன் செயினை அடிக்கும்போது பறித்து சென்றார்.அப்போது நான் அந்த செயினை இழுத்தபோது அதிலிருந்த சிறுபகுதி மட்டும் என் கைக்கு கிடைத்தது. பின்னர் நாடாருக்கு நீ மகனாக இருக்க மாட்டாய் என்று மிரட்டி சென்றார். பின்னர் அப்போது கூட்டம் கூடி, எங்களை அவரிடமிருந்து மீட்டனர். அதன்பின்னர் என்னை எஸ்ஆர்எம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக என் மாமா கொண்டு சேர்த்தார். பின்னர் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த **கையெழுத்துடன் கூடிய புகார் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்தில் எத்தனை வருடங்களாக இருந்து வருகிறேன் என்றால் மூன்றரை வருடங்களாக இருந்து வருகிறேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் யார் யார் இருந்தது என்றால் நானும் என் தங்கை மட்டும் இருந்தோம். ஆஜர் எதிரி வழக்கமாக அவருடைய நாயை காலை நேரத்தில் நடைபயிற்சிக்கு அழைத்து செல்வார் என்றால் சரிதான். எனது அப்பா அவருடைய கடைக்கு முன்பாக நாயை ஏன் அழைத்து செல்கிறீர்கள் என்று கேட்டதால்தான் பிரச்சினை ஏற்பட்டது என்றால் இல்லை. இது சம்பந்தமாக ஏற்கனவே மறைமலைநகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து

இருதரப்பினரும் சமரசமாக சென்றுள்ளோம் என்றால் சரிதான். புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ அசிங்கமான வார்த்தைகளை குறிப்பிட்டு சொல்லி இருக்கிறேனா என்றால் அசிங்கமாக பேசியதாக மட்டும் சொல்லி இருக்கிறேன். புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ கடையை அடித்து நொறுக்கி சேதப்படுத்தியதாக சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை.

புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ என் தங்கை சம்பவம் நடக்கும்போது அங்கு இருந்ததாகவோ, எனது தங்கையை அடித்ததாகவோ சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் மக்கள் நடமாட்டம் மற்றும் மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். சிசிடிவி கேமராவை எடுத்து ஆய்வு செய்திருந்தால் சம்பவம் நடந்ததா இல்லையா என்று தெரிய வரும் என்றால் சரிதான். உண்மையாக சம்பவம் நடந்திருந்தால் சிசிடிவி கேமராவை பற்றி போலீசாரிடம் சொல்லி இருப்பேன் என்றாலும், அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்பதனால்தான் சிசிடிவி கேமராவை பற்றி போலிசாரிடம் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல, சிசிடிவி கேமராவை பற்றி போலீசார் விசாரணையில் சொல்லி இருந்தேன்.

எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், சம்பவம் நடக்கவில்லை என்றாலும், எதிரியின்மீது உள்ள முன்விரோதம் காரணமாக நானாக மருத்துவமனைக்கு சென்று பொய்யான காயச்சான்றிதழ் பெற்று பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு உண்மையாக காயம் ஏற்பட்டிருந்தால் மறைமலைநகரில் இருந்த அரசு மருத்துவமனைக்கு சென்று காயச்சான்றிதழ் பெற்றிருப்பேன் என்றாலும், அவ்வாறு காயம் ஏற்படாததால்தான் தனியார் மருத்துவமனைக்கு சென்று பொய்யான காயச்சான்றிதழ் பெற்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ நாடாருக்கு நீ மகனாக இருக்க மாட்டாய் என்று எதிரி திட்டியதாக சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை.

**மறுவிசாரணை– இல்லை.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 444/2024

### DEPOSITION OF WITNESS
### (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-2/PW-2 |
| Name | : முருகானந்தம் |
| Father/Husband's Name | : முத்து நாடார் |
| Village | : மறைமலைநகர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25.06.2025.

**முதல் விசாரணை–**

நான் பழைய இரும்பு கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் வீட்டின் அருகில் தான் இருக்கிறார். கடந்த 08.08.2023 ஆம் தேதி அன்று காலை 10.30 மணி முதல் 11.00 மணிக்குள்ளாக ஆஜர் எதிரி தன்னுடைய நாயை நடைபயிற்சிக்கு கொண்டு சென்று வரும்போது, எனது கடையின் முன்பகுதியில் அவர் கொண்டு வரும் நாய் சிறுநீர் மற்றும் மலம் கழிப்பதை வழக்கமாக கொண்டுள்ளது. மேற்படி நாய் சிறுநீர் மற்றும் மலம் கழிக்கும் சம்பவமானது 2 வருடங்களாக நடைபெற்று வருகிறது. மேற்படி சம்பவம் தொடர்பாக நான் ஆஜர் எதிரியிடம் கேட்டபோது என் நாய் தினமும் கடை முன்பகுதிதான் மோப்பம் பிடித்து சிறுநீர் மற்றும் மலம் போகும் என்றும் கூறினார். பின்னர், மேற்படி 08.08.2023 ஆம் தேதியன்று சம்பவம் நடைபெற்றபோது நானும் எனது மனைவியும் கோயிலுக்கு சென்றிருந்தோம். 08.08.2023 ஆம் தேதியன்று காலை 10.30 , 11 மணி யளவில் என் சிறிய மகள்

எனக்கு போன் செய்து  அண்ணன் லோகேஷ்ராஜை ஆஜர் எதிரி பெரிய கம்பால் அடித்ததாக எனக்கு சொன்னார். பின்னர், ஆஜர் எதிரி நாயை கட்டிவிட்டு மீண்டும் வந்து அதே கம்பால் என் மகனையும், என் சிறிய மகளான கௌசிகாவை  தள்ளிவிட்டு  அடித்ததாக எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்.  பின்னர், நான் சம்பவ இடம் வந்து பார்த்தபோது அவர்கள் எஸ்ஆர்எம்  மருத்துவமனைக்கு சென்றிருப்பதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். நான் எஸ்ஆர்எம்  மருத்துவமனைக்கு சென்று அவர்களை பார்த்தேன். மேற்படி சண்டை தொடர்பாக என் மகன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். நான் உடன் சென்றிருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரி வழக்கமாக நடைபயிற்சிக்கு நாயை அழைத்து வருவது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக என்னை சேர்த்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் சம்பவ இடத்தில் இல்லை. என் சிறிய மகள் சம்பவத்தை பற்றி தகவல் சொன்ன விவரத்தை போலீசார் வாக்குமூலத்தில் சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. நடக்காத சம்பவத்தை நடந்தது போல எனது மகள் தவறாக எனக்கு தகவல் சொல்லி இருக்கிறாள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana,
Judicial Magistrate No.II,
Chengalpattu.